सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

சுதந்திரத் திருநாள்
அமுதப்பெருவிழா









# ஒவ்வொரு வீட்டிலும் தேசியக் கொடி

**13-8-2022** முதல் **15-8-2022** வரை

சுதந்திரப் போராட்ட வீரர்களின்
தியாகங்களைப் போற்றும் வகையில்

## வீடுதோறும் தேசியக் கொடி

ஏற்றுவோம் !



# சுதந்திரத் திருநாள்
# அமுதப் பெருவிழா

இந்திய நாட்டின் 75வது சுதந்திரத் திருநாளைக் கொண்டாடும் வகையில் சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவை (Azadi ka Amrit Mahotsav) மத்திய அரசு கொண்டாடி வருகிறது. இந்த அமுதப் பெருவிழா வரும் 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை கொண்டாடப்பட உள்ளது.

இந்த அமுதப் பெருவிழாவில், நாட்டின் விடுதலைக்காகத் தன்னலம் கருதாது உடல், பொருள், ஆவி என அனைத்தையும் ஈந்த விடுதலை வீரர்களின் தியாகங்களைப் போற்றுவது, அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவது, விடுதலைப்பெற்ற 75 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், சாதனைகள் மற்றும் கருத்துச் செயல்பாடுகள் என்னும் 5 தூண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதோடு, இன்றைய இளைய சமுதாயத்தினரிடையே நாட்டு விடுதலையின் மகத்தான வரலாற்றைப் பேணிக்காக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஊக்குவிக்கும் நோக்கில் தொடர்ச்சியாக விழாக்கள் நடத்தப்பட்டு வருகிறது.

உலகெங்கும் வாழும் இந்தியர்கள் தங்கள் இருப்பிடங்களில் மூவர்ணக் கொடியை ஏற்றி பட்டொளி வீசி பிரகாசிக்கச் செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், 2022 ஆகஸ்ட் மாதம் 13ஆம் தேதி முதல் 15ஆம் தேதி வரை ஒவ்வொரு வீட்டிலும் தேசியக் கொடியை (Har Ghar Tiranga) ஏற்றும் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் உள்ள ஒவ்வொருவர் வீட்டிலும் தேசியக் கொடியை ஏற்றி சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் 2022 ஆகஸ்ட் மாதம் 13ஆம் தேதி முதல் 15ஆம் தேதி வரை சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகங்களைப் போற்றும் வகையில் தங்களது வீடுகளில் தேசியக் கொடியை அதன் மரபு மாறாமல் ஏற்றி வைத்து மரியாதை செலுத்த அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**விடுதலை வீரர்களின் தியாகத்தைப் போற்றுவோம் !**
**வீடுதோறும் தேசியக் கொடியை ஏற்றுவோம் !!**



# தேசம் போற்றுவோம் – வீடுதோறும் தேசியக் கொடியை ஏற்றுவோம் !


வெளியீடு : செய்தி மற்றும் விளம்பரத்துறை, புதுச்சேரி – 1

வடிவமைப்பு மற்றும் அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி – 9